இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 02.04.2026

# கொரோனா காலத்தில் பழனிசாமி!

“கொரோனா இருந்த காலத்திலும் சிறப்பான ஆட்சியை நான் கொடுத்தேன்” என்று சொல்லி இருக்கிறார் பழனிசாமி. மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நினைப்பில் இப்படி கப்சாக்களை அடித்து விடுகிறார் பழனிசாமி.

**கொரோனா பரவிய போது அ.தி.மு.க.வின் பழனிசாமி ஆட்சி தமிழ்நாட்டில் இருந்தது. என்ன செய்தார்கள் என்றால் ஊரடங்கு போட்டுவிட்டு அன்றைய முதலமைச்சர் பழனிசாமியும், அமைச்சர்களும் பதுங்கி விட்டார்கள். அப்போதும் ‘ஒன்றிணைவோம் வா’ என்ற திட்டத்தை தொடங்கி மக்களுக்கு உணவுப் பொருள் வழங்கியது தி.மு.க. உணவுப் பொருள் தயாரித்து தந்தது தி.மு.க. தொண்டர்கள்.**

கொரோனாவைக் கட்டுப்படுத்த மிக முக்கியமானது தடுப்பூசி தான். அதனைக் கூட ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்குத் தரவில்லை. பழனிசாமி அதனை துணிச்சலாகத் தட்டிக் கேட்கவும் இல்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசை நோக்கி உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பினார்கள். ஆனால் பழனிசாமி, வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டார்.

**திராவிட மாடல் அரசு மலர்ந்ததும் தடுப்பூசி செலுத்துவதை மாபெரும் இயக்கமாகவே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றினார்கள். கோவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த, மக்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதற்கான பல சிறப்பு முயற்சிகளை அரசு எடுத்தது. மாநிலம் முழுவதும், வாரம் தோறும் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தடுப்பூசிக்குத் தகுதியானவர்களில் 8.09 சதவிகித மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 2.84 சதவிகித மக்களுக்கு இரண்டாம் தவணை தடுப்பூசியும் என்ற குறைந்த அளவிலேயே செலுத்தப்பட்டிருந்தது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சிகளால் இந்த நிலை மாறி, ஏழே மாதங்களில் 86.95 சதவிகித மக்களுக்கு முதல் தவணை தடுப்பூசியும், 60.71 சதவிகித மக்களுக்கு இரண்டாம் தவணையும் என 8.55 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன. ஓராண்டுக்குள் அனைவருக்கும் இரண்டு தவணை தடுப்பூசியும் போட்டு, பூஸ்டர் தடுப்பூசியும் போட்டு கொரோனாவை கட்டுப்படுத்தியவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

கொரோனா காலத்தில் மின் கட்டணம் அனைத்து வீடுகளுக்கும் அதிகம் ஆனது. ‘எல்லோரும் வீட்டில் இருப்பதால் மின் கட்டணம் அதிகம் ஆகிறது’ என்று பழனிசாமி விளக்கம் அளித்தார். முந்தைய மாதம் ரூ.420 கட்டணமாக ஒருவருக்கு இருந்தது. கொரோனா காலத்தில் 5,200 ரூபாய் கட்டணமாக வந்தது. முந்தைய மாதம் வரை ரூ.900 செலுத்தியவருக்கு ரூ.4 ஆயிரம் வந்தது. ஒருவர் வீடு மூன்று மாதமாக பூட்டி இருக்கிறது. அவருக்கு ரூ.9 ஆயிரம் கட்டணம் வந்தது. ஏழை விவசாயி ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபாய் கட்டணமாக வந்தது. மின் கட்டணம் மூலம் மக்களிடம் கொள்ளை அடிக்கும் வேலையைச் செய்தது பழனிசாமி ஆட்சி.

அநியாயக் கட்டணம் வசூலித்தது மட்டுமல்ல, அதனைச் செலுத்துவதற்கும் கட்டாயப்படுத்தினார்கள். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மக்களுக்கு மட்டும் சலுகை அறிவித்தார்கள். மற்ற மாவட்டத்து மக்களை ஏமாற்றினார் பழனிசாமி. கொரோனா கொடூரத்திலும் மக்களுக்கு ஷாக் கொடுத்துக் கொண்டு இருந்தார் பழனிசாமி.

- ★ **கொரோனா பரவுகிறது என்று தெரிந்து முன்கூட்டியே சட்டசபையை ஒத்திவைக்கச் சொன்னார் தி.மு.க. தலைவர். முதலில் பழனிசாமி மறுத்தார். அதன் பிறகு ஒத்தி வைத்தார்.**
- ★ **அனைவருக்கும் டெஸ்ட் எடுக்கச் சொன்னார் தி.மு.க. தலைவர். முதலில் பழனிசாமி மறுத்தார். அதன்பிறகு அதிக டெஸ்ட் எடுக்கத் தொடங்கினார்.**
- ★ **வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் கொடுக்கச் சொன்னார் தி.மு.க. தலைவர். பணம் இல்லை என்று மறுத்தார் பழனிசாமி. அதன்பிறகு ரூ.2500 கொடுத்தார்.**
- ★ **பத்தாம் வகுப்பு தேர்வை ரத்து செய்யச் சொன்னார் தி.மு.க. தலைவர். அதன்பிறகுதான் ரத்து செய்தார்.**
- ★ **இ - பாஸ் ரத்து செய்யச் சொன்னார் தி.மு.க. தலைவர். அதன்பிறகுதான் ரத்து செய்தார்.**

– இப்படி ஒவ்வொன்றையும் தி.மு.க. சொன்னபிறகுதான் செய்தார் அன்றைய முதலமைச்சர் பழனிசாமி.

கொரோனா பரவலின்போது நிதி நிலையை சுட்டிக்காட்டி அரசு ஊழியர்கள் ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணமாகப் பெறும் நடைமுறை 27.4.2020 முதல் பழனிச்சாமியால் நிறுத்தப்பட்டது. இதனை மீண்டும் செயல்படுத்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர். அதன்படி, ஈட்டிய விடுப்பை சரண் செய்து பணமாகப் பெறும் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தியது ‘திராவிட மாடல்’ அரசு.

பழனிசாமி தனது ஆட்சிக் காலத்தில் அதிகளவு கடன் வாங்கினார். ‘கொரோனா வந்ததால் கடன் வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டது’ என்று சொன்னார். கடன் வாங்கி, மக்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்பதுதான் உண்மை.

**‘தமிழ்நாட்டில் ஒரே ஒருவருக்கு கொரோனா வந்தால் கூட அம்மாவின் அரசு அவரை காப்பாற்றும்’ என்று சட்டமன்றத்தில் சொன்னவர் பழனிசாமி. ஆனால் 38 ஆயிரம் பேர் இறந்தார்கள். கொரோனா வைரஸ் பற்றிய புரிதலே இல்லாமல் முதல் மூன்று மாத காலம் அனைத்து வகையிலும் மறைத்தவர் பழனிசாமி. இறந்தவர் கணக்கில் பொய்க்கணக்குக் காட்டியவர் பழனிசாமி. கொரோனாவில் ஊழல் செய்தவர் பழனிசாமி என்பதை மக்கள் மறக்கவில்லை.**



வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் நீர்வளத்துறை அமைச்சர் – கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பேசினார். அருகில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், வேலூர் சட்ட மன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் ப.கார்த்திகேயன், பகுதி செயலாளர்கள் எம்.சுனில்குமார், ஜி.வன்னியராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.சரவணன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## காட்பாடி தொகுதி வாக்காளர்களே

# பெருவாரியான வாக்குகள் அளித்து வெற்றியைத் தேடித் தாருங்கள்!

## காட்பாடியில் வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் அமைச்சர் துரைமுருகன் வேண்டுகோள்!

**வேலூர், ஏப்.2-**

**வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் போட்டியிடும் கழகபொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்களை அறிமுகப்படுத்தும் கூட்டம் காட்பாடியில் நடந்தது.**

நிகழ்ச்சிக்கு வடக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் தலைமை தாங்கினார். மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாநகர செயலாளர் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ., லதா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேசினார். அவர் பேசியதாவது:-



பொதுவாக அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று வாக்குறுதிகளை அள்ளிவீசுவார்கள் ஆனால் சொன்னதை செய்துவிட்டு மக்களிடம் வாக்கு கேட்கும் ஒரே தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மட்டும்தான். மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் வழங்குவதாக சொன்னபோது அது சாத்தியமில்லை என விமர்சித்தவர்கள் மத்தியில் அதை சாதித்து காட்டிவிட்டு இன்று வாக்கு கேட்கிறோம்.

காட்பாடி தொகுதியில் 1971 ல் நான்தான் முதல் முதலில் போட்டியிட்டபோது மக்கள் குடிநீருக்காக காலிகுடங்களுடன்ரெயில் நிலையங்களுக்கு சென்றனர் . ஆனால் இன்று மக்களின் வீடுகளுக்கே காவிரி தண்ணீரை கொண்டு வந்தவன் இந்த துரைமுருகன். பல ஆண்டுகளாக மக்கள் அவதிப்பட்ட பொன்னை ஆற்றின் குறுக்கே ரூ.48 கோடி செலவில் சென்னைக்கு இணையான ஒரு பிரமாண்ட பாலத்தை கட்டி கொடுத்தேன்.

மேலும் விருதம் பட்டு,காட்பாடி மேல்பாடி, வி.ஐ.டி. சாலை, பள்ளி கொண்டா குடியாத்தம் தொகுதி முழுவதும் பல பாலங்களைக் கட்டி உள்ளேன்.

மோர்தானா அணையை கட்டி முடித்து பாசனத்திற்கு தண்ணீர் கொண்டு வந்தேன். பாம்பு கடித்தால் சிகிச்சை பெற அடுக்கம்பாறை செல்ல வேண்டிய நிலையை மாற்றி சேர்க்காட்டில் மருத்துவமனை அமைத்தேன்.

காட்பாடிக்கு சட்டக் கல்லூரியை கொண்டு வந்ததோடு வாதாடுவதற்கு இரண்டு நீதிமன்றங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளேன். எல்லாவற்றிற்கும் மேலாக சேர்க்காட்டில் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தை அமைத்துள்ளேன். இன்று ஆக்ஸ்போர்டு, ஹார்வர்டு போன்ற உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் பதிவேடுகளில் காட்பாடியின் பெயர் இடம் பெற காரணமானவன். நான் கடந்த 45 ஆண்டு கால எனது அரசியல் வாழ்க்கையில் யாரிடமும் 5 பைசா வாங்கியது இல்லை எந்த எதிர்க்கட்சிக் காரர்களையும் பழி வாங்கியதோ பொய்வழக்கு போட்டதோ கிடையாது. மக்களிடம் எந்த பந்தாவும் காட்டாமல் காட்பாடி தொகுதியை ஒரு திருக்கோயில் போலவும் மக்களை தெய்வங்களாகவும் கருதி பணியாற்றி வருகிறேன். அகில இந்திய அளவில் ஒரே தொகுதியில் அதிக முறை வெற்றி பெற்றவன் என்ற சரித்திர சாதனையை எனக்கு பரிசளியுங்கள்.

1971 இல் நான் பார்த்த குழந்தைகள் இன்று பேரக் குழந்தைகளை எடுத்து விட்டார்கள். என்னை எதிர்த்து நிற்க உள்ளூரில் ஆளில்லாமல் வெளியூரில் இருந்து வேட்பாளரை இறக்குமதி செய்திருக்கிறார்கள்.

இந்த ஐந்து ஆண்டு காலத்தில் தொகுதிக்கு தேவையான மீதமுள்ள அனைத்து பணிகளையும் முழுமையாக செய்து முடித்துவிட்டு நானே உங்களிடமிருந்து விட்டு விடுங்கள் என கூறுவேன். என் வாழ்வில் எப்போதும் இப்படி உங்களிடம் தலைவணங்கி வாக்கு கேட்டதில்லை இன்று தலை வணங்கி கேட்கிறேன். எனக்கு பெருவாரியான வாக்குகளை அளித்து வெற்றி தேடி தாருங்கள்.

இவ்வாறு அமைச்சர் துரை முருகன் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில் குமார், பகுதி செயலாளர் ஜி.வன்னியராஜா, ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் மற்றும் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலையில் பெரியார், அண்ணா, அம்பேத்கர், கலைஞர் சிலைகளுக்கு அமைச்சர் எ.வ.வேலு மாலை !

*திருவண்ணாமலை, ஏப்.2-*

*திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள், பெரியார், அண்ணா, அம்பேத்கர், கலைஞர் உள்ளிட்ட தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

*01.04.2026 புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள், திருவண்ணாமலை மாநகரம், வேங்கிக்காலில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் சிலை மற்றும் தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர், மகாத்மா காந்தி, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

*அங்கு கூடியிருந்த கூட்டணிக் கட்சி நிர்வாகிகளும், பொதுமக்களும் வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.*

*தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியில் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, மகாலட்சுமிகோவர்தனன், டி.பி.சரவணன் மற்றும் காங்கிரஸ் குணசேகரன், மதிமுக சீனி.கார்த்திகேயன், சிபிஎம்.செல்வம், சிபிஐ திருமலை, மக்கள் நீதி மய்யம் இரா.அருள் மற்றும் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட கழக நிர்வாகிகள் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், துணை மேயர் சு.ராஜாங்கம், பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*



மதுரை கிழக்கு தொகுதி கழக வேட்பாளர் – மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட மாங்குளத்தில் கொளுத்தும் வெயிலில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கோபாலகிருஷ்ணன், எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், வழக்கறிஞர் கலாநிதி, நேருபாண்டியன், விஜயகதிரவன், வடிவேல் முருகன், புதூர் சேகர், அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், மதிவாணன், பூமிநாதன், சசிகுமார், பாண்டியராஜா, வீரராகவன், இளங்கோ, ஆதிசங்கர், மீரா ஜான், வெற்றிச்செல்வன், மருதுராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.